பக்கங்கள் 8 விலை சதம் 30 ★ ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 13 ரபிஅவ்: 5 இதழ்: 14

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-2-77

# யாழ்ப்பாணத்திலிருந்து சங்கானைக்கு உணவு

## உத்தரவுபெற்ற வியாபாரிகள்மூலம் விநியோகம்

சங்கானை, புதன்

சங்கானைப் பகுதி மக்களுக்கு உத்தரவுபெற்ற வர்த்தகர்கள் மூலம் இன்று பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன. வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலம்மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து பங்கீட்டுப் பொருட்கள் லொறிகள் மூலம் சங்கானைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உத்தரவுபெற்ற வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த ஏழு நாட்களாக சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் வேலைநிறுத்தம் நடைபெற்றுவருவதால் இப் பகுதி மக்கள் பங்கீட்டுப்பொருட்களைப் பெறமுடியாமல் அவதியுற்றனர். அத்துடன்பங்கீட்டுப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள களஞ்சியத்தின் முன்னால் வேலைநிறுத்தம்செய்து வரும் ஊழியர்கள் சத்தியாக்கிரகம் செய்துவருவதால், களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை வெளியில் எடுப்ப

(8-ம்பக்கம் பார்க்க)

# ஈ. வெ. கி. சம்பத் காலமானர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் உபதலைவர்; முன்னர் அண்ணாவின் நண்பர்!

சென்னை,பெப். 23

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உபதலைவரான திரு. ஈ. வெ. கி. சம்பத் இன்று காலை சென்னையில் காலமானர்.

திரு. சம்பத் கடந்த சில தினங்களாக உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது நிலைமை இன்று காலை திடீரென மோசமடைந்து மரணம் சம்பவித்தது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

காலஞ்சென்ற சீர்திருத்த இயக்கத்தின் தந்தையும், திராவிடர் கழகத் தலைவருமான அமரர் ஈ. வெ. ராமசாமிநாயக்கரின் சகோதரரின் மகனன திரு. சம்பத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய தலைவர்களின் ஒருவராக அறிஞர் அண்ணதுரையின் பேரன்பைப்பெற்று இருந்தவர்.

தமது தனித்துவமான பேச்சாற்றலின் மூலம் 'சொல்லின் செல்வர்' என்று பாராட்டுப் பெற்ற திரு. சம்பத் தி. மு. கழகத்துடன் தமக்கு ஏற்பட்ட சிலகருத்து வேறுபாடுகள் காரணமாக அதில் இருந்து கவிஞர் கண்ணதாசனுடன் விலகி ''தமிழ்த் தேசியக் கட்சி'' என்ற புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தார்.

குறுகிய காலத்திற்குள்ளாகவே அக்கட்சியைக் கலைத்து விட்டுப் பல வருடங்களாக எக்கட்சியிலும் சேராது மௌனம் சாதித்துவந்தார்.

கடந்த சில வருடங்களுக்கு முன் ஆளும் காங்கிரஸில் சேர்ந்து தீவிரமாக அக்கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

காங்கிரஸ் வளர்ச்சிப் பிரசாரங்களின்போது தாம் முன்னர் சார்ந்திருந்த தி. மு. க. வைக் கடுமையாகச் சாடவும் அவர் தயங்கவில்லை.

திரு. சம்பத்தின் மரணம் தமிழ்நாட்டின் அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈ, வே. கி. சம்பத்துக்கு இறக்கும்போது 51வயது. இவர் 1926ம் ஆண்டு ஈரோடில்பிறந்தார். (உ)

இளைஞர்களுக்கு

கவிஞர்

காசி ஆனந்தன்

அறிக்கை

பக்கம் – 5

# 12,000 யார் பிடவை நேற்றுத் திடீர் மறைவு

சங்கானை ப. நோ. கூ. சங்கத்திலிருந்து நேற்று 12,000 யார் பிடவை நேற்றுமாயமாய் மறைந்துவிட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்தறி நிலையத்திலிருந்து இந்தத் துணிகள் மறைந்து விட்டதாக புகாரில் கூறப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கிறது. (ஆ)

# சீன இராணுவ உயர் அதிகாரிகள் குழு வருகை

கொழும்பு, வியா

சீனஇராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வந்தடையவுள்ளது.

சீன ஆயுதப்படைத் தலைவரும், கடற்படை பிரதம அதிகாரியும் மற்றும் 3 சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களும் இக்குழுவில் அங்கம்வகிப்பர்.

1975ம் ஆண்டில் இலங்கை இராணுவகமாண்டர் சேபால அட்டியகலை சீனவுக்குச் சென்றிருந்தபோது விடுத்த அழைப்பை ஏற்று இந்தச்சீன இராணுவ குழு இங்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சிநேகபூர்வ அடிப்படையில் இவர்களது விஜயம் இருக்கும்.

பிரதமரையும் ஜனதிபதியையும் சந்தித்துப் பேசவுள்ள இவர்கள் சீன உதவியுடன் அமைக்கப்பட்ட மின்னேரிய பிடவை ஆலைக்கும் விஜயம் செய்வர். இங்கு தங்கியிருக்கும் காலத்தில் கண்டி, அநுராதபுரம், நுவரெலியா போன்ற இடங்களுக்கும் இவர்கள் செல்ல ஏற்பாடாகியுள்ளது. (ஆ)

## தொண்டமானுறில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியா

தமிழர் கூட்டணியின் கருத்தரங்கு இன்று பிற்பகல் தொண்டமானுறு பிள்ளையார் கோவில்முன்றலில் நடைபெறவுள்ளது. திரு. [illegible] எம். பி., திரு. [illegible] ரத்தினம் எம். பி., திரு. க. ஜெயக்கொடி எம். பி., திருமதி அமிர்தலிங்கம், திரு. சிவதாசன், திரு. எஸ். கே. மகேந்திரன், கனக மனேகான் ஆகியோர் இதில் கலந்து கொள்வர். (ஆ)

காசி ஆனந்தனுக்கு சுந்தரர் அழைப்பு!

# 'செல்வா பாதையை விட்டு வேறு பாதையில் திரும்புக'

யாழ்ப்பாணம், வியா

தற்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன் விடுதலைக்குரலை எழுப்புமாறு கேட்கிறீர்களே—வருகிற தேர்தலின் பின்னர் இவர் பிரதமராக இருப்பாரா? அவ்விதம் வந்தாலும்விடுதலைக் கோரிக்கையை இவரால் ஒப்பேற்ற முடியுமா? என்று காசி ஆனந்தனுக்கு அனுப்பிவைத்துள்ள பகிரங்கக் கடிதமொன்றில் தமிழ்பேசும் இளைஞர் இயக்கஅமைப்புத்தலைவர் திரு. ஸி. சுந்தரலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது:

தந்தை செல்வநாயகம் இருபது வருடங்களாக சமஷ்டிக் கட்சியின் கொள்கையை ஒப்பேற்றளத்தனித்தார். பண்டா-செல்வா, டட்லி-செல்வா, ஒப்பந்தங்கள் அழிந்துவிட்டன. தற்போது விடுதலைக் குரல் எழுப்புங்கள் என்று நீங்கள் கேட்கிறீர்கள் இதன்அர்த்தம் தனிப்பட்ட ஈழத்தமிழ் அரசாங்கம் என நான் கருதுகிறேன். இது சரியா? பிழையா?

1803ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அச்சடிக்கப்பட்ட அரோசிமித்படத்தின் படி 1832ம் ஆண்டுக்கு முன் ஈழத்தமிழ் பிரதேசங்களில் நடந்த அரசாங்கத்தை தமிழ்மக்கள்பெற்றுக்கொள்ள வேண்டுமென 25 வருடங்களுக்கு மேலாக நான் குரல் எழுப்பிவந்தேன். இதனைப்பின் பற்றப்போகிறீர்களா? அல்லது வாய்ப்பேச்சால் நீங்கள் விடுதலைக்குரலை மாத்திரம் எழுப்பப் போகிறீர்களா?

23 வருடங்களாக தந்தை செல்வநாயகம் பின்பற்றிய மார்க்கங்கள், வழிகள், பேச்சுக்கள், தாக்குகள் நிறைந்த கோடிக்கணக்கான சொற்கள் மூலமாக எடுத்தபலன் என்ன? அதனைப் பின்பற்றப் போகிறீர்களா?

நீங்கள் பெயர் பெற்ற கவிஞர். ஆண்ட பரம்பரை, மீண்டும் ஆளவிரும்புவதில் என்ன குறை என்ற மகிமையுள்ள குரலைக் கேட்டிருக்கிறோம். இதனைவிட விடுதலைக் குரலைத் தற்போது எழுப்புவது வீண்.

நீங்கள் தந்தை செல்வநாயகத்தின் வழியை பின்பற்றுமல் வேறுபாதையில் இறங்குங்கள். என் இயக்கத்தில் சேருமாறு தயவாக அழைக்கிறேன். (க-ஆ)

## 'சுந்தரர்' அழைப்பு பற்றி இளைஞர்பேரவை ஆராயும்!

### 27-ம் திகதி கொழும்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

சிறைமீண்ட இளைஞர்கள் தேர்தலில் போட்டியிடவேண்டும் என தமிழ்பேசும் இளைஞர் இயக்க அமைப்பாளர் திரு. ஸி. சுந்தரலிங்கம் விடுத்த அழைப்பு பற்றி கொழும்பில் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ்இளைஞர் பேரவை மத்தியகுழுவினர் ஆலோசிக்கவிருக்கிறார்கள்.

கொழும்பில் கூட்டணி தலைவர் மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் இல்லத்தில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இன்றுள்ள அரசியல்நிலைமை பற்றி ஆலோசிக்க தம்மைச் சந்திக்குமாறு திரு. ஸி. சுந்தரலிங்கம் அனுப்பியுள்ள கடிதம் காசிஆனந்தன், திரு. சேனதிராசா, வண்ணை ஆனந்தன், இளைஞர்பேரவை அமைப்பாளர் திரு. மகாராசா ஆகியோருக்கு கிடைத்துள்ளது.

இக் கடிதம் பற்றியும் இளைஞர்பேரவை மத்தியகுழுக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

அடுத்த பொதுத்தேர்தல் பற்றியும் ஆராயப்படவிருக்

(8ம் பக்கம் பார்க்க)

மல்லாகம் கொலை வழக்கு:

# தமிழ் பேசும் ஜூரிகள் வேண்டும் என்றனர்!

## சிங்களம்பேசும் ஜூரிகளை விரும்பிய எதிரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சிங்களம் பேசும் ஜூரிகள் முன் விசாரணை நடைபெற வேண்டும் என ஏற்கனவே கோரியிருந்த எதிரிகள் நேற்று தமிழ் பேசும் ஜூரிகள் முன் விசாரணை நடைபெறவேண்டும் என்று விடுத்தகோரிக்கையை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

மல்லாகம் கொலைவழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப். எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே எதிரிகள் தமிழ்ப்பேசும் ஜூரிசபை முன் விசாரணை நடைபெற வேண்டும் எனக்கோரினர்கள்.

இவ்வழக்கில் மல்லாகத்தில் விநாயகர் செல்வராசா, சின்னத்துரை கந்தசாமிஆகியோர் அழகன் நாகனைக் கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி.பொன்னம்பலம் (ஜூனியர்), சட்டத்தரணி ஆர். ஜி. செல்வரத்தினத்துடன் ஆஜரானர். 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி எஸ். வரதராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசினல் சட்டத்தரணி காசி விஸ்வநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் ஆஜரானர்.

இவ்வழக்கு மே மாதம் 11-ம் தேதி விசாரணைக்காக ஒத்திபோடப்பட்டது. (க-அ)

# யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவ தன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

### போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 1[illegible] வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி,

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ................................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ................................

விலாசம்: ................................

வயது: ......................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

### பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்

..........................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## விளையாட்டு விழா

நல்லூர், புதன்

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கிடையிலான விளையாட்டு விழா அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகின்றது.

இவ்விழாவில் மெய்வல்லுநர் போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, கரபந்தாட்டப் போட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி ஆகியன இடம்பெறவுள்ளன.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை விளையாட்டதிகாரி திரு. ரிநடராசா கவனித்துவருகிருர்

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கனகசபை வயித்திலிங்கம், அராலி தெற்கு, அராலி.
வாதி

இல. ஈடு/14971

எதிராக

கனகசபை மாரிமுத்து, அராலி தெற்கு, அராலி.
பிரதிவாதி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 14971/ஈடு இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு பங்குனி மாதம 2-ந் திகதி 1977-3-2-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி அளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 2,734/-. இதில் ரூபா 2000/-க்கும் 1975-7-30 தொடக்கம் 19-2-76 வரைக்கும் 100க்கு 10% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 470/89. (இதில் நடைபெற்ற செலவு ரூபா 280/50. நடைபெறவேண்டிய செலவு ரூபா 116/82 மேலதிக சமயாசமயச்செலவு ரூபா 73/57) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று அராலி தெற்கிறை "தறணன்" பர நெல் இலா எட்டும் குளி நாலும் (இல 8—4) கிணற்றில் நாலிலொரு பங்கும் பனைகளும் இதனெல்லைகள் கிழக்கு சபாரத்தினம் பெண் சற்குணவதியம்மாவினுதனம்,வடக்கு நாகலிங்கம்பெண்செல்லம்மாவுக்கும்வேலுப்பிள்ளை சதாசிவத்துக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சுப்பிரமணியம் கந்தசாமியினுதனம், தெற்கு வயித்திலிங்கம் கனகசபாபதிக்கும் பெண் பாக்கியத்துக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

89, 1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
10-1-77.

5544

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 11454

கெங்காதேவி பொன்னுச்சாமி
2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிராக

1. சந்தியா கபிரியல் யேசுதாசன்
2. பெண் அக்நஸ் யேசுதாசன்,
52/1, டேவிட் ரேட், யாழ்ப்பாணம்.
தற்போது 610, அழுத்மாவத்தை ரோட்டு,
கொழும்பு 15
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11454-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ந் திகதி (16-3-77) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3601/96 சதம். 9-2-70 தொடக்கம் 24-5-70 வரைக்கும் ரூபா 3000/-க்கு 14% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 330/20 சதம். மேலதிகச் செலவு ரூபா 191/30 முத்திரைச் செலவு 9/60 செலவில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 80/- + 70/- (ரூபா 150/-) கழித்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை "பறையன் மணற்காடு" இதன் விஸ்தீரணம் 16 5/8 குளிகள், கடையும் வீடும் கிணறும் பயிர்வகைகளும் பிரசித்த அளவையாளர் A. லசாரஸ் அவர்களால் 8-2-62ல் தயாரிக்கப்பட்ட படம் இலக்கம் 2900ல் லொற் 1-ம், 2-ம் பாகமாகக் காட்டப்பட்டது. எல்லை கிழக்கு டேவிட் ரேட், வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு செல்லர் அப்பாத்துரையின் ஆதனம். இக் காணியின் பதிவு இலக்கம் D 330/200.

வே. கோபாலபிள்ளை,
விற்பனவுக் கமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

22, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

5546

## விவசாயப் பாடசாலை

### யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பப் பகுதி

மருதனுமடம், சுன்னுகம்.

° ஒரு வருடப் பயிற்சி 16—22 வயதுடைய 7-ம் வகுப்பு கல்வித்தரம் உடைய இளைஞர்கட்கு சித்திரை மாதம் ஆரம்பமாகும். 12-3-77க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

° இளம் பெண்களுக்கு ஒரு மாத கோழி வளர்ப்புப் பயிற்சிகள். உடனடியாக விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

5519

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஏழாலைசைவப்பிரகாச பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் "தக்குடுவை" என்னும் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம்செய்யவும், குடியிருக்கவும் நல்லது. விபரங்களுக்கு "தேவா நிர்வாக நிலையம்", கோட் ரேட், மல்லாகம். தொடர்புகொள்ளவும். 5534

### வகுப்புகள்

விஞ்ஞான முறைப்படி வெட்ட பூப்போட தைக்க, தையல் வகுப்புகள் பிற்பகல் 1 மணி தொடக்கம் 4 மணி வரை வார நாட்களில் மட்டும் நடைபெறுகின்றது. மாதாந்தக்கட்டணம் ரூபாய் பத்து. விபரங்கட்கு நேரில். தையல் ஆசிரியை. இல. 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 5532

### தேவை

மரத்தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு தளபாட வேலைசெய்யத் தெரிந்தவர்கள் 15 பேர் உடன் தேவை அனுபவத்துடன் சகல விபரங்களுடனும் அடையாள அட்டை விபரத்துடனும் விண்ணப்பிக்கவேண்டும். அத்துடன் மரவேலை செய்வதற்குரிய உபகரணங்கள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: ஸ்ரான்லி பேணிசிங் மார்ட், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5550

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5548

பாண் தயாரிப்பதில் அனுபவம்உள்ள ஒருவரும் பாண் விநியோகம் துவிச்சக்கரவண்டியில் செய்யக்கூடிய ஒருவரும் தேவை. செந்தாமரை பேக்கரி, பாலாவோடை சந்தி, காரைநகர். 5549

## நூல் வெளியீட்டில் துரிதம்

மட்டக்களப்பு, புதன்

மட்டுநகர் 'மலர்' இலக்கியக்குழு நிறுவனம் இவ்வாண்டில் குறைந்தபட்சம் நான்கு நூல்களையாவது வெளியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.

இவ்வாண்டின் முதலாவது வெளியீடாக முல்லைமணி வே. சுப்பிரமணியம் எழுதிய 'அரசிகள் அழுவதில்லை' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவரவிருக்கிறது. இதைத் தொடர்ந்து திரு. ரி. பாக்கியநாயகத்தின் நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதி ஒன்றும் வெளிவர இருக்கின்றது.

மலர் இலக்கியக் குழு எற்கனவே வெளியிட்டுள்ள செ. யோகநாதனின் "ஒளி நமக்கு வேண்டும்" சிறுகதைத் தொகுதி, அருள் சுப்பிரமணியத்தின் "அலர்களுக்கு வயது வந்துவிட்டது" நாவல் ஆகிய இருநூல்களும் சாகித்தியமண்டலப் பரிசு பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

......

## 3 கோடி லாபம்

கொழும்பு, புதன்

அரசாங்கப் பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் 3 கோடி ரூபா லாபம் பெற்றுள்ளது என்று கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# இந்திரா மீண்டும் பதவிக்கு வந்தால் அதுவே ஜனநாயகத்துக்கு முடிவாம்

## ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறுகிறார்

புதுடில்லி, பெப். 23 "திருமதி இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் ஜனநாயகத்துக்கு முடிவு ஏற்பட்டு விடும்"

இவ்வாறு சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.

பம்பாயில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் திரு. ஜெயப்பிரகாஷ் மேலும் கூறியதாவது:

ஜனதா கட்சி பதவிக்கு வந்ததும் நாட்டின் பொதுவிஷயங்களை கவனிப்பதற்கு பொது ஸ்தாபனம் ஒன்றை அமைப்போம்.

லோகசபைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்பதைக் கவனிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட இரு கமிட்டிகள் அமைக்கப்படும். இந்த இரு கமிட்டிகளும் உத்தேச பொது ஸ்தாபனத்தில் இயங்கும்.

இந்திரா அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறிவிட்டது. இதன் காரணமாக மக்கள் காங்கிரஸ் ஆட்சியில் நம்பிக்கை இழந்து விட்டனர். (இ)



### கிராம அபிவிருத்தியை துரிதப்படுத்த...

மாவிட்டபுரம், புதன்

நாட்டிலுள்ள கிராம அபிவிருத்தி அதிகாரிகளுக்கு தீவிதமாக அவர்கள் கிராம அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட வசதியளிக்கு முகமாக அரசினால் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட இருக்கின்றன.

மேற்கு ஜேர்மன் நிறுவனமொன்றின் உதவியுடன் 75 வீதப் பணப் பெறுமதியில் வழங்கப்படும் இம்மோட்டார் சைக்கிள்களை காடு பூராவிலுமுள்ள 51 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பெறுகிறார்கள். (உ)

## அவசரகால நிலையால் தேர்தல் பாதிக்காது

### இந்திரா விளக்கம்

புதுடில்லி, பெப். 23 தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கவும் பொருளாதாரக்குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்காகவுமே அவசரகாலநிலை இன்னும் அமுலில் இருக்கிறது. பொதுத்தேர்தலில் மக்களுக்கு இருக்கும் சுதந்திரத்தை இது எவ்வகையிலும் பாதிக்கமாட்டாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

பத்திரிகைநிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவசரநிலையை விலக்குவது, கடந்த 19 மாத காலமாக கட்டிக்காத்துவந்த ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் பொருளாதாரக் குற்றவாளிகள் மீதான நடவடிக்கையையும் பாதிக்கும் என்றும் திருமதி காந்தி கூறினார்.

பத்திரிகைத் தணிக்கை நீக்கப்பட்டதும் பத்திரிகைகள் சில ஒருதலைப்பட்சமாக செய்திகளை எழுதிவருகின்றன என்றும் திருமதி காந்தி குற்றம் சாட்டினார். (இ)

......

### அமெரிக்க அரசியல் கைதிகள் நிலை

நியூயோர்க், பெப். 23 அமெரிக்கச் சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளுக்கு அவர்களுக்கானசலுகைகள் வழங்கப்படுவதில்லை எனவும், இவர்கள் சரியானமுறையில் நடாத்தப்படுவதில்லைஎனவும் பியூட்டோறிகன் தேசபக்தர்கள் அமெரிக்க அரசிடம் புகார் செய்துள்ளனர்.

1898ல் அமெரிக்க அரசினால் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றப்பட்ட தமது தாயகத்தின் விடுதலைக்கும், சுயாதீனத்துக்குமான 1954ல் நடைபெற்ற போராட்டத்தில் பங்கெடுத்தமைக்காக ஆயிரக்கணக்கான பியூட்டோறிக்கன் தேசபக்தர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையினில் தள்ளப்பட்டனராம். (இ)

### பஸ்விபத்து: 9 பேர் பலி

மதுரை, பெப். 23 மதுரையில் நடைபெற்ற பஸ் விபத்து ஒன்றில் 9 பேர் கொல்லப்பட்டனர். 24 பேரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

மதுரையிலிருந்து பழனிக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று மற்றுமொரு பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்துநடந்தது. இரண்டு பஸ்களிலும் 108 பேர் இருந்தனர். இதில் நால்வர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஐவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள். (ஆ)

## "எண்ணெய் விலையை உயர்த்த மாட்டோம்"

### சவூதிஅரேபியா மீண்டும் அறிவிப்பு

அபுதாபி, பெப். 23 எண்ணெய்விலை அதிகரிப்புக்கு உலக பொருளாதாரநிலை இடம் கொடுக்கமாட்டாது. ஆகவே நாம் எண்ணெய் விலையை அதிகரிக்கமாட்டோம்.

இவ்வாறு சவூதி அரேபிய எண்ணெய் அமைச்சர் ஜகி ஜமானி அபுதாபியில் கூறினார்.

எண்ணைய் விலை அதிகரிப்பு குறித்த அரபு நாடுகளின் மாறன்பாட்டைத் தீர்க்க 'ஒப்பெக்' நிறுவனம் தவறிவிட்டது என்றும் அவர் கூறினார்.

எண்ணெய் விலையை ஜனவரியில் 5 வீதமும் ஜூலையில் 10 வீதமும் அதிகரிக்க வேண்டும். என்ற 11 நாடுகளின் தீர்மானத்தை சவூதி அரேபியாவும், ஐக்கிய அரபு எமிரேட்சும் எதிர்த்து 5 வீதம் மட்டுமே விலை உயர்வு இருக்கவேண்டும் என்று அறிவித்திருந்தன. (இ)

## இந்தியத் தேர்தல் அரங்கு

### எதிர்க்கட்சிக் கூட்டணியைத் தோற்கடிக்க சஞ்சய் ஆலோசனை

எதிர்க்கட்சியினரின் கூட்டணியைத் தோற்கடிக்கச் சகல மக்களும் காங்கிரஸ் கட்சிக்கு ஒற்றுமையுடன் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வரான திரு. சஞ்சய் காந்தி நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

### 100 நேரடிப் போட்டிகள்

லோகசபைத் தேர்தலில் 100 தொகுதிகளில் நேரடிப் போட்டிகள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது.

### 108 சுயேச்சை வேட்பாளர்கள்

நாடு முழுவதும் 108 சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### மதுக் கடைகள் மூடப்படும்

தேர்தலை முன்னிட்டுப் புதுச்சேரியில் மார்ச் 14ந் திகதி முதல் 17ந் திகதி வரை மதுபானக் கடைகளை மூடிவைக்குமாறு பாண்டிச்சேரியில் அரசு உத்தரவிட்டுள்ளது.

### 14 இடங்களில் தி.மு.க-அ.அ.தி.மு.க. போட்டி

தமிழ்நாட்டில் 20 தொகுதிகளில் போட்டியிடும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 14 தொகுதிகளில் தனது தாய்க்கட்சியான தி. மு. க.வை எதிர்த்துப் போட்டியிடுகிறது. 5 தொகுதிகளில் ஸ்தாபனக் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிடுகிறது.

### சிறையில் சித்திரவதைக்குள்ளாகிப் பிணமாக வெளிவந்த சிட்டிபாபு...

சிறையிலே சித்திரவதை செய்யப்பட்டுப் பிணமாக வெளிவந்த கலைக்கப்பட்ட லோகசபையின் தி. மு. க. உறுப்பினர் சிட்டி பாபுவின் மரணம் பற்றி விசாரணை நடத்தப்படவேண்டுமானால் தி. மு. க.-ஜனதா கட்சியினர் மீண்டும் தெரிவுசெய்யப்படவேண்டுமென்று செங்கற்பட்டு தி. மு. க. வேட்பாளர் திரு, இரா. நெடுஞ்செழியன் பிரசாரக் கூட்டமொன்றில் கேட்டுள்ளார்.

### 79 பேர் தி. மு. க.வில் சேர்ந்தனர்

தாம்பரத்தில் அ. அ. தி. மு. க.வைச் சேர்ந்த 58 பேரும் காங்கிரஸ் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 10 பேரும் தி. மு. க.வில் சேர்ந்துள்ளனர். சென்னை 77வது வட்டம் ராமராவ் தோட்டத்தைச் சேர்ந்த 11 பேரும் அ. அ. தி. மு. க.விலிருந்து விலகித் தி. மு. க.வில் சேர்ந்துள்ளனர்.

### 3 லட்சம் புதிய வாக்காளர்

தேர்தல் அறிவிப்பு வெளிவந்த பின்னர் ஜனவரி 27 முதல் பெப்ரவரி 5 வரை தமிழ்நாட்டில் 3 லட்சம் வாக்காளர்கள் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வாக்காளர் தொகை இப்போது 3 கோடி 71 லட்சமாகும்

### காங்கிரஸை எதிர்த்து காங்கிரஸ் வேட்பாளர்

இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் உத்தியோகபூர்வமான வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடக் கட்சி அனுமதியின்றி வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்துள்ள காங்கிரஸ்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காங்கிரஸ் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

## அரசு விளம்பரங்கள் தேர்தல் பிரசாரமாம்

### ஜனதா கட்சி ஆட்சேபம்

சென்னை, பெப். 23 தேர்தல் முடியும்வரை அரசின் சாதனைகள் அடங்கிய விளம்பரங்களை-பத்திரிகைகளை வெளியிட வேண்டாம் என்று தமிழ்நாடு ஜனதா கட்சி தமிழ்நாடு கவர்னர் திரு. மோகன்லால் சுக்காடியாவைக் கேட்டுள்ளது.

அரசின் சாதனைகளை பத்திரிகைகளில் பிரசுரிப்பது அரசாங்க செலவில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தாலே அமையும் என்றும் கவர்னருக்கு அனுப்பியுள்ள மகஜரில் ஜனதாகட்சி கேட்டுள்ளது.

பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு பொலிசார் தயங்காது பாரபட்சமின்றி அனுமதி வழங்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

தேர்தல் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பிறகட்சித் தொண்டர்களை செல்வாக்குப் படைத்த உள்ளூர் பிரமுகர்களின் தூண்டுதலின் பேரில் பொலிசார் தொந்தரவு செய்யக்கூடாது என்று அவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

### சமயச் சொற்பொழிவு

சுழிபுரம், புதன்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் இலட்சார்ச்சனையில் தினமும் மாலைவேளைகளில் அருட்கவி சீ. விநாசித்தம்பியின் சமயச் சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது.

# "இந்திராவுடன் தனிப்பட்ட குரோதம் எதுவும் இல்லை"

## ஜனநாயகத்தைக் காப்பதே தமது கடமை என்கிறார் விஜயலட்சுமி

புதுடில்லி, பெப். 23 'பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் எனக்கு தனிப்பட்டரீதியில் குரோதம் எதுவும் கிடையாது'.

இவ்வாறு தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய திருமதி விஜயலட்சுமி பண்டிட் தெரிவித்தார்.

76 வயதான திருமதி பண்டிட் அரசியல்வாழ்விலிருந்து சிறிதுகாலம் ஒதுங்கியிருந்தார் திருமதி பண்டிட் இப்போது திரு. ஜெகஜீவன்ராம் ஆரம்பித்துள்ள ஜனநாயக காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம்செய்துவருகிறார்.



ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக காங்கிரஸிலிருந்தும் மந்திரிசபையிலிருந்தும் வெளியேறிய திரு. ஜெகஜீவன் ராமுக்கு ஆதரவு தெரிவித்து நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தாம் பாடுபடப் போவதாகவும் திருமதி விஜயலட்சுமி தெரிவித்தார், (இ)

### அஞ்சலி

வண்ணார்பண்ணை, புதன்

குருநகரில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில் மறைந்த தலைவர்களான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. மு. திருச்செல்வம் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மணிவாக்கு

நிரந்தர சமாதானத்தை அடையமுடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அது மனித இயல்பின் தெய்விகத் தன்மையில் அவநம்பிக்கை கொள்வதாகும்.

--மகாத்மா காந்தி.

ஈழநாடு
THE EELANADU

## பாவனைப் பொருள் விநியோகம்

சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு நெருங்கிக்கொண்டிருக்கிறது.

பாவனைப் பொருட்களின் விநியோகத்திற்குப் பொறுப்பான அரசாங்க நிறுவனங்கள் சுறுசுறுப்பாகச் செயல்படவேண்டியதன் அவசியத்தைச் சிறு கைத்தொழில் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். கே. கே. சூரியாராச்சி வலியுறுத்தியிருக்கிறார்.

அமைச்சர், தமது அமைச்சில் கூட்டிய மகாநாடொன்றில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், சலுசலா, பாற்சபை, பி. ஸி. ஸி., சந்தைப்படுத்தற்பகுதி கூட்டுறவு ஆணையாளர் இலாகா, உணவு இலாகா ஆகியவைகளின் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

பாவனைப் பொருட்கள் சீரான முறையில் விநியோகிக்கப்படவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார். பாவனையாளர்களின் கைகளில் இப்பொருட்கள் நேரடியாகப் போய்ச் சேருவதற்குள்ள இடையூறுகள் நீக்கப்படவேண்டுமென்றும் அமைச்சர் எடுத்துக் கூறியிருக்கின்ருர்.

புதிய ஒரு திட்டத்தின்படி தோட்டத் தொழிலாளருக்கும் ஒரு பகுதிப் புடவை விநியோகிக்கப்படுமாம்.

சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இருபது லட்சம் ரூத்தல் லக்ஸ்பிறே பால்மாவைப் பாற்சபை மாதந்தோறும் விநியோகித்துள்ளதாம். அடுத்த வாரத்திலிருந்து மேலும் ஒரு லட்சம் ரூத்தல் லக்ஸ்பிறே பால்மா வழங்கப்படவிருக்கிறதாம். இவை தவிரத் தினமும் 'விட்டாமில்க்' பத்தாயிரம் ரூத்தல் வழங்கப்படுகிறதாம்.

இந்தப் பால்மா விநியோக முறையைப் பரவலாக்கப்போவதாகவும் பாற்சபைப் பிரதிநிதி தெரிவித்திருக்கிருர்.

குறைந்த விலையில் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்த மீன் ரின்களை விநியோகிக்கப்போவதாகக் கூ. மொ. வி. வாக்குறுதியளித்திருக்கிறது.

இது மட்டுமல்ல.

ஐந்தரை அவுன்ஸ் மீன் ரின் இரண்டு ரூபாயாகவும், ஒரு ரூத்தல் ரின் நான்கு ரூபாய் ஐம்பது சதமாகவும் விற்கப்படுமென்றும் அடுத்த மாதம் முப்பது லட்சம் மீன் ரின்களை விநியோகிப்பதற்கும் கூ. மொ. வி. உத்தேசித்திருக்கிறதாம்.

இவற்றையெல்லாம் படிக்கும்போது புது வருடத்தைப் பற்றி இனியென்ன கவலையென்று எண்ணத்தோன்றும்!

பொதுமக்களுக்குப் பாவனைப் பொருட்கள் தடங்கலின்றி நியாயமான விலையில் கிடைக்கவேண்டுமென்பது அமைச்சரின் நோக்கம்.

அதற்காக அவர்எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டவேண்டும்.

அமைச்சர் நினைப்பது போன்று எல்லோருமேநினைத்து நடக்கவேண்டுமே?

கூட்டுறவுத்துறை நிறுவனங்களுக்கு நல்லரகப் புடவைகள் வழங்கப்படாமலில்லை.

தட்டுப்பாடான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படாமலில்லை.

பொதுமக்களுக்கு இவை கிடைக்கவேண்டுமென்பதற்காகத்தான் பலபெயர்களில் இயங்கும் கூட்டுறவுத்துறை நிறுவனங்களுக்கு இவை விநியோகிக்கப் படுகின்றன.

பொதுமக்களும் பொருள்கள் வந்துவிட்டன; இனிக் கைக்கு வந்தமாதிரித்தான்' என்று நம்பிக்கொண்டிருப்பார்கள்.

ஆனல் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போன கதைதான் பொதுமக்கள் பலரும் காணும் அனுபவம்.

'வந்ததுதெரியும் போவது எங்கே; வாசல் நமக்கே தெரியாது' என்ற நிலை தான் பொதுமக்களின்நிலை!

ஆனல் இந்தப் பொருள்கள் தனியார் கடைகளில் அதிகவிலைக்கு எந்தச்சமயத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதற்கு என்ன காரணம்?

இவற்றை ஆராய்ந்தால் பொதுமக்களுக்குப் பாவனைப் பொருள்கள் கிடைப்பதிலுள்ள கஷ்டத்தைத் தெரிந்துகொள்வது கடினமல்ல!

## அரசின் சோஷலிஸப்பயணம் தடை இருப்பினும் தொடரும்

### அரிசி, பால், சீனியில் விரைவில் தன்னிறைவு என்கிருர் அமைச்சர்

கொழும்பு, புதன்

''எத்தகைய தடைகள், கஷ்டங்கள் இருப்பினும் ஐக்கிய முன்னணிஅரசின்சோஷலிஸப் பயணம் தொடர்ந்து செல்வதைத் தடுக்கமுடியாது.''

இவ்வாறு விவசாயகாணி அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவித்தார்.

மீரிகமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அரசின் சோஷலிஸப் பயணம் தொடர மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தயக்கமின்றித் தமது ஆதரவை அளிக்கவேண்டும்.

எமது ஆட்சியில் அரிசி, சீனி, பால் ஆகிய உணவுப் பொருட்களில் இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் நாடு தன்னிறைவு கண்டுவிடும். இதன்மூலம் பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்துவோம்.

நாட்டில் முன்னர் 1 லட்சத்து 10 ஆயிரம் பைந்து பால் நாளாந்தம் பெறப்பட்டது. இப்போது அது 3 லட்சத்து 20 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ)

......

## மட்டக்களப்பில் மழை

வவுணதீவு, புதன்

கடந்த இரு மாதங்களின் பின்னர் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக அறுவடை'சூடு மிதிப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சில பகுதிகளில் இன்னும முதிர்ச்சி அடையாத வேளாண்மைகள் இருப்பதால் அப்பகுதிகளில் இம்மழை மிகவும் பயன் தருவதாக இருக்கின்றது என தெரிவிக்கப்படுகிறது. (உ)

பகவத்கீதை வெண்பா

# சர்வசமய சமரச பொது நூல்

— அமரர் க. இராமச்சந்திரா —

**கீதை** ஒரு போர் நூல். அதைத் தீண்டுவதே பாவம். வைணவச் சார்புடைய அந்நூலைப் படிப்பது சிவதுரோகம் எனும் கொள்கையுடையோரும் தப்பித்தவறி நம் முன்னே இருக்கிருர்கள். இவர்கள் சமயஞானத்தில் பாலகர்கள். வீண்பாவம் தேடும் இவர்கள் விசாலபுத்தி பெறவேண்டும். கீதை போர் நூலாக இருப்பின் அது 2ம் அத்தியாயம் 37ம் சுலோகத்தின் மேல் வளர்ந்திராது. ஈழநாட்டுச் சைவப்பெரியார் இராமநாதவள்ளலார் அதற்கு மொழிபெயர்ப்பும், விருத்தியுரையும் செய்து வெளியிட்டிருக்கமாட்டார். கண்ணன் அடிக்கடி தருமம், கருமம் என்ற இரு பதங்களையும் ஒரே கருத்தில் அருச்சுனனுக்கு வற்புறுத்திப்பேசவேண்டியதேவையும் ஏற்பட்டிராது.

இன்று உலக அறிஞர்கள் ஏனைய சமய சாத்திரங்களிலிருந்து பிரித்தெடுத்து அதற்குத் தனிப்பெருமை அளித்துப் புத்தம்புதிய நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் பிற மொழிகளிலும் வரைவதற்குக் காரணம் அதில் அடங்கியுள்ள சர்வ சமய சமரச ஞானமேயாகும். 4ம் அத்தியாயம் 11ம் சுலோகமானது இந்த உண்மையை நமக்கு அருமையாக விளக்குகின்றது. இக்கருத்தைப் புலவர்மணியின் வெண்பாவிலே கீழே தருகின்ருேம்.

'யார்யார் எனை எங்கெங்
கெவ்வாறு வேண்டுவரோ
சேர்வேனவர்க் கருளைச்செய்
தங்கே-ஓர்வால்நீ
என்னெறி நிற்பாரேயிங்
கெல்லோரும் ஆங்கவரை
நன்னெறியிற் சேர்ப்
போனும் யான்.'

ஓர் அபூர்வமேதை, பௌதிக சாத்திர விற்பன்னர், விஞ்ஞான கலாநிதி, தத்துவசாத்திர கலாநிதி. இவர் தத்துவாதீனமான நிலை குறித்துப் பல நூல்கள் வரைந்துள்ளார். அவற்றுள் இவருக்கு உலகப் பிரசித்தியைத் தேடிக்கொடுத்தது- 'இம்பிரிஸன்ட் ஸ்னென்டர்' என்னும் நூல். அதனைக் கீதையிடப்பட்ட பிரபை எனலாம். இந்த ஆண்டில் வெளிவந்த இவரது கடைசி நூலில் கீதைக்கு இரு அத்தியாயங்கள் கொடுத்துள்ளார். உலகிலே தோன்றியுள்ள வெவ்வேறு மார்க்கங்கள் எவ்விதம் பிரிக்கமுடியாத முறையில் கீதையில் பிரிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை விளக்கி அது இறுதியில் வற்புறுத்தும். சரணுகதிக்குச் சென்றநூற்ருண்டில் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சதேவர் ஓர் ஒப்பற்ற உதாரணமாக வாழ்ந்தார் என்றுகூறியுள்ளார். அத்தோடு அவரின் அமிர்த மொழிகள் சிலவற்றைச் சேர்த்துள்ளார். இந்த மேதையின்பெயர் ரேனர். ஸி. ஜான்ஸன். இடம் இலண்டன்நகர்.

தமது இன்பமயமான இல்லற வாழ்வின் பொன்விழா மலராக இக்கடைசிநூலைவரைந்து இதனைத் தமது வாழ்வு சிறக்கச்செய்த அருந்துணைவியாருக்கே சமர்ப்பணம் செய்துள்ளார் இப்பெருந்தகை. எனவே இப்பெரியார் நவீன ஐரோப்பாக்கண்ட இணையற்ற இல்லற ஞானியுமாவார்.

கலாநிதி ஜோன்சனைப் போலவே உபநிடத சாத்திரங்களிலும், கீதாயோக சாத்திரங்களிலும் தோய்ந்த உள்ளம் படைத்த பிறிதோர் ஐரோப்பியமேதை ஒரேகாலத்தில் வாழ்ந்து இன்றைக்கு பதினைந்து ஆண்டுகளுக்குமுன் பரமபதம் அடைந்தனர். அவர் பெயர் கலாநிதி கார்ள்ஜியுங். உலகபிரசித்திபெற்ற உளநூல் நிபுணரும் வைத்தியகலாநிதியுமான இப்பேரறிஞர் கருமத்தை உயிராகவும், பக்தியை இதயமாகவும் கொண்டுள்ள பகவத்கீதைக்கு சிரசாக விளங்குவதும் நவீன விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய, ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மைகளை அடக்கியதும் ஞானயோகமே என்பதை நன்குணர்ந்து அதை ஜெர்மன் மொழியில் விளக்கியுள்ளார். இந்த ஞானத்தை பூரண சொரூபமாக இருபதாம் நூற்ருண்டில் இந்தியாவில் வாழ்ந்தவர் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் என்பது அவர் வாக்கு.

பரமஹம்சதேவர் கீதைக்கு தியாகம் என்ற சொல்லில் உரையருளித்திருப்பதை பலரும் அறிவர். இன்னுமோர் அனுபூதிச்செல்வர் கருமம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றின் தொகுதியான கீதை 'தத்வமஸி' எனும் மகாவாக்கியத்தின் மந்திரவடிவு என்று விளக்கம் தந்துள்ளார். அதாவது தத்= தவம்÷நீ-அஸி இருக்கிருய் என்பதாம். அது கருமயோகத்தால் வழிபடும் கடவுளைக் குறிக்கிறது. 'நீ' எல்லாம் நீயேயென்னும் பக்தியோகத்தை விளக்குகிறது. 'அஸி' 'இருக்கிருய்' உயிர்களெல்லாம் அதுவேயாக இருக்கின்றன என்னும் ஞானத்தைக் குறிக்கின்றது.

இவ்விதம் ஒரு சொல்லிலும் மூன்று சொல்லிலும் உரை விளக்கக்கூடிய கீதைக்கு ஏன் நூற்றுக்கணக்கான விரிவுரைகள்? ஆயிரக்கணக்கான சுலோகங்கள்? பாடல்கள் என்று வினவுவாரும் உளர். இவ் வினக்கள் குறுகிய புத்தியில் நின்றும் தோன்றியவை.

இன்றைய அபாயகரமான நிலையிலிருந்து மனிதகுலம் காப்பாற்றப்பட வேண்டின் கீதைகாட்டும்பாதையில்மனித சமுதாயம் செல்லவேண்டும். இன்றைய சூழ்நிலையை மாற்றியமைக்கும் முறையில் கீதாசாதகர்கள் வழிவகுக்க வேண்டும். புலவர்மணி கீதையைக் கையாண்டு காலத்துக்கேற்ற ஒரு புதுவழியை வகுத்திருக்கிருர். இந்தக்கீதை வெண்பா போன்ற நூல்கள் ஒவ்வொரு வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும், வாசிகசாலைகளிலும் இடம்பெறவேண்டும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை காலதேவி வேண்டிநிற்கும் ஓர் அரும்பணியை சிறந்த முறையில் செய்துமுடிக்கக் கண்ணனின் கருவியாகவந்துள்ளார் என்பதே எமது அசையாத நம்பிக்கை. அவர் பிறக்கும்போதேகவித்துவமும்அவருடன் பிறந்ததெனக்கூறுதல் மிகையாகாது. அத்தோடு அவர் அன்பையும், அமைதியையும், அடக்கத்தையும், பணிவையும், பண்பையும் ஆபரணமாகப் பூண்டுள்ளார்.

அவர் இயற்றியுள்ள மூன்று நூல்களையும் தமிழ்பேசும் சமுதாயம் இன்று ஆர்வத்துடன் ஏற்றிப்போற்றத்தவறினலும், இருபதாம் நூற்ருண்டின்இறுதியில் பல பதிப்புகளை வெளியிட்டுப் பரவச்செய்யப் போவது நிச்சயம். அந்தக் காட்சியைக் காண்பதற்குஇந்த உடல்இல்லாது மறைந்து போயினும் எமது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அவர்களது சந்ததிகளைச் சேர்ந்தவர்களும் இதைக் காணும் பாக்கியம் பெறுவார்களென்றபூரண நம்பிக்கையுடன் இந்தமுன்னுரையை முடிக்கிறேன்.

பயன்கருதாப் பணியாகும்
கரும யோகம்
பயில்பயனல் பல்லுயிரில்
தனையே பார்த்து
பியன்பெற்ற பக்திநெறி
பன்னீராண்டு
விவேகமுடன் சாதித்து
முதிர்ச்சிபெற்று
உயர்வுற்ற ஞானமதை
அனுபவத்தால்
உணர்புலவர் மணி பெரிய
தம்பிப்பிள்ளை
அயராத முயற்சியினல்
கீதாயோகம்
அருளினன் அவர் நாமம்
என்றும் வாழ்க.

(முற்றும்)

பகவத்கீதை வெண்பா மூன்ரும் பாகம். கிடைக்குமிடம்: புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள், மட்டக்களப்பு. விலை: ரூபா 7-00.

## மானிப்பாய் ப.நோ கூ சங்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூசங்கம் நடாத்தவுள்ள பேச்சு, கட்டுரை, கவிதை போன்ற போட்டிகள் மேற்பிரிவினருக்கு மாத்திரம் எதிர்வரும் சனிக்கிழமை காலை நடைபெறும்.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவினருக்கான போட்டிகள் மார்ச மாதம் 5ம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப் படுகிறது. (உ)

# ஆத்மீக அறிவுரைகேட்பதில் சிங்கப்பூர்மக்கள் ஆர்வமாம்

நாவலப்பிட்டி, புதன்

''சிங்கப்பூர் மக்கள் ஆத்மீக அறிவுரைகளைக் கேட்பதிலும் ஆலய வழிபாட்டிலும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.'' என்றுஆத்மஜோதி நா. முத்தையா கூறினர்.

உலக இந்துமகாநாட்டில் பங்குபற்றிய பின் மூன்று மாத காலம் மலேஷியாவில் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றிய பின் நாடு திரும்பிய அவருக்கு நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி காவிலில் திரு. பி. டி. கிஷ்ணமூர்த்தி தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பில் திரு. முத்தையா பேசுகையில், ''உலகிலேயே சிங்கப்பூர் சுத்தமான நகர் என்ற பாராட்டைப்பெற்றிருக்கிறது. வாழ்க்கை வசதிகளும், நல்ல சட்ட திட்டங்களும் உள்ளன, இவை மக்களை மகிழ்ச்சியுடன் வாழ வழிவகுக்கின்ற போதிலும் உள்ளத்தில் அமைதி இல்லையே என்ற ஏக்கம் அவர்களையும் வாட்டத்தான் செய்கிறது. இதனல் ஆத்மீக அறிவுரைகளைக் கேட்பதாலும், ஆலய வழிபாட்டிலும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர். மலேஷிய மக்களின் அன்பும் விருத்தோம்பலும்மறக்க 'முடியாதவை'' என்ருர். (உ)

# "அடக்கமும் பணிவுமுள்ள இளைஞர் சமுதாயத்தை உருவாக்கவேண்டும்

## தீவிரம் என்ற பேரில் வெறிஓட்டம் ஓட அனுமதிப்பது நோக்கத்தை அழிக்கும்"

### உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அறிக்கை

**வவுணதீவு, புதன்**

**'தமிழ் ஈழத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முறையான பயிற்சி தேவையாகும். பணிவையும் அடக்கத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தீவிரம் என்றபேரில் இளைஞர்கள் நிதானமிழந்து ஓடும் வெறிப்போக்கு ஏற்படாமல் முன்கூட்டியே நாம் அவர்களைப் பக்குவமாக வளர்த்து எடுக்க வேண்டும்'**

இவ்வாறு கவிஞர்காசி ஆனந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்களில் ஒருவரும் தமிழ்இளைஞர் பேரவையின் அமைப்புத் தலைவர்களில் ஒருவருமான கவிஞர் காசி ஆனந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ் ஈழத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முறையான பயிற்சிதேவைஆகும். பணிவையும் அடக்கத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் தீவிரம் என்றபேரில் இளைஞர்கள் நிதானமிழந்து ஓடும் வெறிப்போக்கு ஏற்படாமல் முன்கூட்டியே நாம் அவர்களைப் பக்குவமாக வளர்த்து எடுக்கவேண்டும்.

மெதுவான போக்குள்ள ஓர் இயக்கத்துக்குத் தேவைப்படும் பணிவு, அடக்கம் இவற்றைவிட தீவிர இயக்கம் ஒன்றுக்கு இன்னும் கூடுதலான பணிவும், அடக்கமும் தேவையாகும். நேதாஜி சுபாஸ் தீவிரவாதியாக இருந்தார். ஆனால் காந்திஅடிகளிடம் இருந்த பணிவும் அடக்கமும் நேதாஜியிடம் இன்னும் கூடுதலாகவே இருந்தது. காந்திஅடிகள்மேல் நேதாஜிஎந்தநேரமும் அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள்.

தந்தை செல்வா, தளபதி அமிர் ஆகியவர்களை முழுமையாக மதிக்கவும் மரியாதை செய்யவும் தமிழ் இளைஞர்கள் முதலில் தெரிந்திருக்கவேண்டும். ஒரு கட்டுப்பாட்டின்கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பக்கபலமாக அவர்கள் நிற்கவேண்டும். தமிழர் கூட்டணியை அவர்கள் உந்தித் தள்ளவேண்டுமேதவிர உதைத்துத்தள்ளக்கூடாது.

தமிழ் இளைஞனின் நெஞ்சில் விடுதலை கிடைக்கும் என்ற தெம்புஇருக்கவேண்டும் அவன் கையில் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்நோக்கி வீசும் அம்பு இருக்கவேண்டும். ஆனால் தமிழ் இளைஞன் தலையில் கொம்பு இருக்கக்கூடாது. தமிழர் விடுதலைப்போரில் நீண்ட அனுபவத்தையும் தியாகத் தழும்புகளையும் கொண்ட தலைவர்களை எள்ளிநகையாடும் அளவு அவன் திமிர்கொண்டவனுக வளரக்கூடாது.

'தமிழ் இளைஞர் பேரவை பணிவும் அடக்கமும் உள்ள இளைஞர்களைத் தயாரித்து தமிழர் கூட்டணிக்குள் அனுப்புவதன் மூலம் கூட்டணியில் தீவிரவாத நிலைமையை விட்டுவிலகிச்செல்லும் அளவுக்கு பணிவும், அடக்கமும்அற்ற வெறும் வெறிக்கூட்டத்தை தமிழ்இளைஞர்பேரவை உருவாக்குமானல் நாளை தமிழ் ஈழத்தின் ஒற்றுமை மீண்டும் சிதையும். போட்டி மேடைகள் மீண்டும் அமையும். குழப்பங்கள் தலைதூக்கும். 1948ம் ஆண்டு தொடக்கம் 1972ம் ஆண்டு வரை தமிழ் ஈழத்தில் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள்போட்ட அடிபிடிகள் மீண்டும்ஏற்படும். தமிழ் ஈழம் என்பது அடைய முடியாத கனவாக ஆகிப் போகும்.'

## புரியாத புதிராம்

**மட்டுவில், புதன்**

சாவகச்சேரி நகர மத்தியில் நிறுவும் பொருட்டு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையின் தற்போதைய நிலை என்ன என்பது பொதுமக்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறதாம்.

இதுபற்றிப் பொதுமக்கள் பேசிக்கொள்வதாவது:- சாவகச்சேரியின் முன்னுள் நகரசபை உறுப்பினர்கள், தலைவர் ஆகியோர் நகர மத்தியை அழகுபடுத்தும் பொருட்டு வள்ளுவர் சிலை ஒன்றை நகர மத்தியில் அமைப்பதெனத் தீர்மானித்தனராம்.

நகர மத்தியில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்து கோபுரத்தின்கீழ் அழகுற இச்சிலையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டனவாம்.

இதற்கிடையில் நகரசபை கலைக்கப்பட்டது.

விசேட ஆணையாளர் ஆட்சியில் இதற்கான மேல் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுவதற்குரிய அறிகுறியும் தெரியவில்லையென்று பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள். [உ]

## கச்சதீவில் பண்டமாற்று இம்முறை அதிக பயன் தராதாம்

**வண்ணார்பண்ணை, வியா.**

அடுத்த மாதம் 10ம் திகதி ஆரம்பமாகும் கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தை முன்னிட்டு எடுக்கவேண்டிய சகல அரசாங்கஇலாகா நடவடிக்கைகளும் துரிதமடைந்துவருகின்றன. கச்சதீவிலிருந்து துறைமுகங்களில் வந்திறங்கும் யாத்திரீகர்கள் கொண்டுவரும் வெளிநாட்டுப்பொருட்களுக்கு உடனுக்குடன் வரி அறவிடப்படும் என்று சுங்கப்பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ்.சுங்கப்பகுதியினர் இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கும் தயாராக ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இதற்கு மேலதிக உத்தியோகத்தர்களை வரவழைப்பதற்கும், ஜீப் வண்டிகளைவரவழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கச்சதீவு செல்லும் யாத்திரிகர்களுக்கு நொற்றுநோய் தடுப்புஊசிமருந்து ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப்பகுதியினர் எடுத்துவருகின்றனர். கச்சதீவிலும், யாழ். மாவட்டத்திலும் உள்ள ஐந்து இறங்குதுறைகளிலும் இதற்கான ஒழுங்குகள் செய்யப்படவிருக்கின்றன.

கச்சதீவில் வியாபார நிலையங்களை வைப்பதற்கு விண்ணப்பித்துள்ளவர்களது விண்ணப்பங்கள் சுங்கப்பகுதியினரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

தேங்காய்எண்ணைஇம்முறை விலைகூடியிருப்பதால் இதுசம்பந்தமான பண்டமாற்று வியாபாரமுறை அதிகபயனைக் கொடுக்கும்என்று நம்பமுடியாதெனப் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். கடந்தவருடம் போல் இம்முறையும் இரண்டு போத்தல் தேங்காய்எண்ணை மட்டுமே கொண்டுசெல்ல அனுமதிகிடைக்கும். (அ)

## 4 சைக்கிள் திருடியதாக ஒப்புக் கொண்டார்

**நெல்லியடி, புதன்**

பட்டப்பகலில் சைக்கிள் திருடிய வாலிபரொருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டபோது, தான் ஏற்கனவே மூன்று சைக்கிள்களைத் திருடியதாக ஒப்புக்கொண்டார்.

பருத்தித்துறை நகரத்தில் பட்டப்பகல்வேளையில விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை வாலிபரொருவர் திருடி கொண்டுச் சென்றபோது, கையும் மெய்யுமாகப் பிடித்த அப்பகுதி மக்கள் அவரையும் சைக்கிளையும் பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

வதிரியைச் சேர்ந்த வ. யோகதாஸ் என்ற இவ்வாலிபரைப் பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் கே. மயில்வாகனம் விசாரணை செய்தபோது ஏற்கனவே மூன்று சைக்கிள்களைத்தான் திருடியதாகவும் இதுநான்காவது சைக்கிள் என்றும் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து இவ்வாலிபரைப் பொலிசார் பருத்தித்துறை நீதவான் திரு. அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது, அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (அ)

......

## இலக்கிய சங்கங்கள் பதிவு

**வண்ணார்பண்ணை, புதன்**

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இலக்கிய சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் புதிதாக அமைக்கப்படும் இலக்கிய சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் யாழ். மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இது சம்பந்தமான பதிவு விண்ணப்பப் படிவங்கள் மேற்படி உத்தியோகத்தரினல் விநியோகிக்கப்படுகின்றன.

கலாச்சார அமைச்சின் புதிய பதிவு செய்யும் திட்டத்தின் கீழ்இச்சங்கங்கள் பதிவு செய்யப்படவிருக்கின்றன. [அ]

## "அமரர் ஜி. ஜி. ஈழத்தின் அண்ணா"

**கொழும்பு, புதன்**

அமரர் அண்ணாவின் வாழ்க்கை எவ்வாறு தமிழகத் தமிழர்களின் வரலாருக அமைகிறதோ அவ்வாறே அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வாழ்க்கையும் ஈழத தமிழர்களின் வரலாருக அமைந்துவிட்டது. வரலாற்று நாயகர்களெல்லாம் மறைகிருர்கள். ஆனல் தமிழனுக்குத்தான் இன்னமும் வரலாற்று நூல் எழுதப்படவில்லை. அண்ணா அமெரிக்க யேல் பல்கலைக்கழகத்தில் திருக்குறளை எடுத்து விளக்கியவாறுதான் ஐ. நா. அவையிலே அமரர் ஜி. ஜி. புறநானூற்றின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாசகத்தை எடுத்துச்சொன்னர். தமித் தலைவர்கள் உண்மையிலேயே வேற்றுமைகளை இன்னமும் ஒளித்தும் மறைத்தும் பாராட்டாமல் மனப்பூர்வமாக ஒற்றுமைபூண்டு தமிழர்களது வளமான மேம்பாட்டான வாழ்வுக்காகப் பணிபுரிதலே மறைந்த தலைவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனுகும்" இவ்வாறு கலைஞர் கருணநிதி பொதுப்பணி மன்றம் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடாத்திய மறைந்த தலைவர்கள் அறிஞர் அண்ணா, திரு. ஜி. ஜி. நினைவாஞ்சலிக் கூட்டத்தில் உலகத் தமிழ்இளைஞர்பேரவையின் இலங்கை அமைப்பாளரும் கலைஞர் கருணநிதி பொதுப்பணி மன்றத்தின் தொடக்க ஆண்டுத் தலைவருமாகிய திரு. க. நவசோதி குறிப்பிட்டார்,

மன்றத் தலைவர் திரு. ம. சு. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்ட தொடக்கத்தில் இரு நிமிட மௌனஅஞ்சலியை அடுத்து கவிஞர் சிவராசன் கவிதாஞ்சலி செலுத்தினர். மன்ற அமைப்பாளர் திரு. ந. சந்திரசேகரன் மறைந்த தலைவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலைசூட்டி அஞ்சலி செலுத்தினர்.

திரு. கம்பளைதாசன், இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, நடிகமணி கே. ஏ. ஜவாஹர், சட்டத்தரணி எம். எச். எம். அஸ்ரப். திரு. கலையன்பன். எஸ். பி. பாண்டியன் நடராஜா ஆகியோரும் பேசினர். செல்வி மு. பொன்னி நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

**கரம்பொன் சிறிய புஷ்ப**

**மகளிர் மகாவித்தியாலயம்**

# கல்விப்பணியில் 50 ஆண்டுகள்

**யாழ்.** கத்தோலிக்க மறை மாவட்டத்துக்கு மூன்று ஆயர்களை அளித்த பெருமைக்குரிய ஊர்காவற்றுறையில் உள்ள கரம்பொன் கிராமத்தில் தாய்க்குலத்தின் கல்விப் பணியில் ஐம்பது ஆண்டுகள் அரும்பெரும் சேவை ஆற்றிய கலைக்கூடமான சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம் கடந்த 18-ம் தேதி பொன் விழா கொண்டாடி மகிழ்ந்தது.

ஈழத்திருநாட்டில் கல்விப் பணியில் சிறப்பு மிக்க இடத்தை வகிப்பவர்கள் திருக்குடும்பக் கன்னியர் சபையினர் தான். யாழ்ப்பாணத்திலும் இந்தக் கன்னியர், கல்விக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர். அவர்களால்தான் தீவுப் பகுதியிலும் பல பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன.கரம்பனூரில் 1926 ம் ஆண்டு திருக்குடும்பக் கன்னியர் பெண்களுக்கென்று ஒரு ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தனர். இதுதான் சிறிய புஷ்ப மகளிர் ஆங்கிலப் பாடசாலையாகும். ஆண்டுகள் செல்லச் செல்ல மாணவர் தொகை அதிகரிக்கவே இப்பாடசாலையை விஸ்தரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்த நோக்கத்துடன் கரம்பொன் பாலைக்காட்டுச் சந்தியில் காணி வாங்கப்பட்டு, 1952-ம் ஆண்டு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டன. புதிய கட்டிடத்தை அமைக்க சங். சகோதரி கொலட்டும், சங். சகோதரி லூட்ஸும் அரும்பாடுபட்டனர். அதன்பின் அதிபராகப் பதவியேற்ற சங். சகோதரி லூசிலாவின் சேவையைக் கரம்பனூர் மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். 17 ஆண்டுகள் அவர் இந்தப் பாடசாலையில் பணியாற்றியுள்ளார். அவருடைய சேவைக் காலம் இவ்வித்தியாசாலையின் பொற்காலம் எனலாம்.

1960-ம் ஆண்டு இப்பாடசாலை அரசினரால் சுவீகரிக்கப் பட்டது. அதன் பின்னர் இது மகாவித்தியாலயத் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. தீவுப்பகுதியில் மகாவித்தியாலயம் என்ற தரத்திற்கு உயர்த்தப்பட்ட முதல் மகளிர் பாடசாலை இதுவேயாகும். 1971 ம் ஆண்டு கரம்பொன் புனித செபஸ்தியார் ரோ. க. சிரேஷ்ட பாடசாலையும் இதனுடன் ஒன்றிணைக்கப்பட்டது. 1973 ம் ஆண்டு தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறைக் கல்வி வட்டாரத்தில் இதுவும் ஒரு முன்னேடிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது. அரசினரால் பொறுப்பேற்கப் பட்ட பின்பும் அதன் முன்னேற்றம் வளர்ச்சி குன்றிவிடவில்லை.

இன்றைய அதிபர் சங். சகோதரி கார்மலிற்ரு தமது முன்னேடிகள் காட்டிய வழி நின்று அரும்பணிகள் பரிந்து வருகின்ருர். அவருடைய அரும் முயற்சியினுல் சென்ற ஆண்டு புதிய பெரிய மாடிக் கட்டிடம் அமைக்கப் பட்டுப் பொன்விழா மண்டபமாகக் காட்சிதருகிறது.

ரோஜா மலரின் இனிய சுகந்தத்தைப்போல் அரிய கல்விப் பணியால் நறுமணங் கமழ்ந்து தாய்க்குலத்தின் உயர்வுக்கு உழைத்துவரும் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம் என்றும் வாழ்க.

**எஸ். எம். யோசெவ்,**
செயலாளர்
(பெற்ருர் ஆசிரியர் சங்கம்)

# "ஜி.ஜி.யின் தலைமையில் தமிழர் அன்றேஇணைந்திருக்க வேண்டும்"

### ராஜன் எம்.பி

வவுணதீவு, புதன்

'தமிழ்மக்கள் ஈழத்தில் தலைசிறந்த ராஜதந்திரியையும் அரசியல்—சட்டத்தலைவனையும் இழந்துவிட்டமை காலத்தால் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரர் பொன்னம்பலத்தின் தலைமையில் அவர்காட்டிய அரசியற்பாதையில் அன்றைய சூழ்நிலையில் தமிழினம் ஒன்றுபட்டிருந்தால் சகல உரிமைகளுடனும் வாழ்ந்திருக்கலாம்' என்று மட்டக்களப்பு இரண்டாவது எம். பி.யும், மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. ராஜன் செல்வநாயகம் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு புகழ்மாலை சூட்டினார்.

ஈச்சந்தீவுப் பிரிவு முன்னாள் கிராமசேவையாளவர் திரு. அ. வயிரமுத்து தலைமையில் நாவற்காடு கிராமப் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு வைபவமொன்றில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது: 'ஆட்சிமன்றத்தில் அமரர் ஜி. ஜி. அமைச்சர் பதவி வசித்த காலத்தில் அவர் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றியசேவை சகலருடைய பாராட்டுதல்களையும்பெற்றது. குறிப்பாகதமிழ்ப் பிரதேசங்களில் வாழைச்சேனை காகிதஆலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை நிறுவியமையும், சோல்பரி அரசியல் சட்டத்தில் பல திருத்தங்களைக் கொண்டுவந்து தமிழருக்கு அரசியல்ரீதியிலான பாதுகாப்புக்களை ஏற்படுத்தியமையும் வரலாற்றின் சிறப்பான அம்சமாகும் என்றார்.

அவர் மேலும் பேசுகையில், 'நீண்டகாலமாக பின்தங்கியுள்ள இப்பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காக நான் எடுத்துவரும் நடவடிக்கைகள்பற்றி எனதுதொகுதி மக்கள் அறிவார்கள். குறிப்பாக வலையிறவுப்பாலம் மட்டக்களப்புவாவியினால் துண்டிக்கப்பட்டுள்ள படுவான்கரையை விருத்திசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பாரிய திட்டமாகும், எனது காலத்திற்குள்ளேயே நாவற்காடு பிரசவ மனையை மேலும் விருத்திசெய்து மின்சாரவசதியும், குழாய்நீர் விநியோகத்திட்டமும் ஏற்படுத்தித்தருவேன் என்பது உறுதி' என்றார். (உ)

# கிளிநொச்சியில் யாழ். மாவட்ட சந்தைப்படுத்தும் சம்மேளனம்

வண்ணார்பண்ணை, வியாழன்

யாழ்.மாவட்டத்தின் மிகப் பெரிய சந்தைப் படுத்தும் சம்மேளன அலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் திறக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப் படுத்தும் சம்மேளனத்தின் வடபிரதேச தலைமை அலுவலமாக இது இயங்கவிருக்கிறது.

மன்னார் மாவட்ட அரசியல் அதிகாரியும், தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியர் இதைக்கடந்த சனிக்கிழமை திறந்துவைத்தார். மக்களுக்குத் தேவையான சகல விவசாய உபகரணங்களையும், ரசாயனப் பொருட்களையும் விற்பனை செய்யவும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் இந்தநிலையம் பல லட்சம் ரூபாவை முதலீடு செய்யவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். கரடிப் போக்குச் சந்தியில் இது அமைந்துள்ளது. (அ)

......

## தெல்லிப்பழையிலும் விழா ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா.

கைதடி இலங்கைச் சைவ அநாதை இல்லத்தின் கொடிநாளை முன்னிட்டு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் தலைவர் பூ. முருகையா தலைமையில் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் 10-ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, நற்பொறுப்பாளர் திரு. ஆ. கந்தையா ஆகியோர் கலந்துகொள்வார்கள். (அ)

# "யாழ்.மாவட்டம் அரசின் பன்முகத் திட்டத்தால் சிறப்படைந்துள்ளது" — யாழ். அரசியலதிகாரி

வண்ணார்பண்ணை, புதன்

"அரசாங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பலதரப்பட்ட அபிவிருத்திவேலைகளைச் செய்துவருகிறது. அரசாங்கத்தின் திட்டத்தினால் யாழ் மாவட்டம் மிகவும் சிறப்படைந்துள்ளது, இந்த நிதியிலிருந்து வசதிகுறைந்திருந்த எமது கல்லூரிகள் பல வசதிகள் பெற்றுள்ளன."

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் அதிகாரியும் நல்லூர் எம். பியுமான திரு. சி. அருளம்பலம் கொக்குவில் கிழக்கு இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய நவீன விஞ்ஞானகூடத் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்,

கல்லூரி அதிபர்திருமதிசரஸ்வதி கணேஸ்வரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. அருளம்பலம் மேலும் பேசுகையில், "எந்த அரசும் செய்யாத சேவைகளை இந்த அரசு எமது நாட்டிற்கு செய்துள்ளது, இதனால் வடபகுதி மக்கள் என்றுமில்லாத அளவு நன்மைகளை அனுபவித்து வருகின்றனர், இத்திட்டத்தின் கீழ்த்தான் இக்கல்லூரிக்கும் 75,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இக்கட்டிடமும் உருவாகியது" என்றார்,

கொக்குவில் கிராமசபைப்பகுதி விசேஷ ஆணையாளர் திரு. கே. புஷ்பராசா உட்பட பலர் உரையாற்றினர். (அ)

## திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை திருட்டு வழக்கில் சாட்சியங்கள் மூலம் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியரான விநாயகர் இராசேந்திரம் அல்லது சின்னராசா என்பவர் தொழிற்சாலைக்குச் சொந்தமான இரும்பு பிளேட், வெல்டிங்கம்பி ஆகியவற்றைத் திருடியதாகக் குற்றம்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணையை அடுத்து எதிரியை விடுதலை செய்த நீதிபதி திரு. எம். டி. யேசுரட்ணம் சாட்சியங்கள் மூலம் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லையென்றும், சாட்சியங்கள் முரண்பாடாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். (உ)

## வலையிறவு கி. மு. அ. சங்கம்

வவுணதீவு, புதன்

வலையிறவு கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி அலுவலர் திரு. க. மகேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. பிலிப் அந்தோனிப்பிள்ளை, துணைத்தலைவர்: திரு. கா. சின்னத்துரை, செயலாளர்: திரு. ந. ஜெயானந்தன், துணைச் செயலாளர்: திரு. மு. சிவகுமார், தனதிகாரி: திரு. க. குழந்தைவடிவேல், கணக்காய்வாளர்: திரு. பு. கருணனந்தம். (உ)

## மெய்கண்டான் ம.வி. பொன்விழா கொண்டாடும்

சுழிபுரம், புதன்

சுழிபுரம்-பண்ணாகம் தெற்கு மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் பொன் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதென மேற்படி வித்தியாலயத்தின் பெற்றார்-ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய எச். என். சி.ஈ. வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் அதற்குவேண்டிய அனுமதியை தொகுதி எம். பி. மூலம் பெறுவதற்கு முயற்சிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## புதிய வசந்தமண்டபம்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்டசெலவில் புதிய வசந்தமண்டபம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

மலேசியாவில் வாழும் பண்ணாகத்தைச் சேர்ந்த ஓர் அன்பரின் உபயமாக இக்கட்டிடம் கட்டும் பொறுப்பை கோயில் பரிபாலனசபையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

புதிய மண்டபம் வரும் பங்குனிமாதத்திருவிழாவுக்கு முன்னர் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

......

## புங்குடுதீவில் லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், வியா.

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மாசி மக உற்சவம் மார்ச் மாதம் 4-ம் திகதி நடைபெறும், இம்மாதம் தொடக்கம் நடைபெறும் இலட்சார்ச்சனை மாசி மகத்தன்று முடிவடையும். முதல்நாளும் இறுதி நாளும் சங்காபிடேகமும் இறுதிநாள் அன்னதானமும் நடைபெறும்,

தினமும் வித்வான் பொன் கனகசபையின் சொற்பொழிவும் இடம்பெறும். (ஆ)

## மானிப்பாய் ஐ. தே. க. மத்திய அமைப்பு

யாழ்ப்பாணம், வியா.

ஐக்கியதேசியக் கட்சியின் மானிப்பாய் தொகுதி மத்திய அமைப்புக் கூட்டம் ஐக்கிய தேசியக்கட்சி அலுவலகத்தில் தொகுதியின் பிரதம அமைப்பாளரான திரு. எஸ். அலோசியஸ் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட மத்தியஅமைப்பு நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். அலோசியஸ் (பிரதமஅமைப்பாளர்) உபதலைவர்: சபா சின்னத்தம்பி, பொதுச்செயலாளர்: ப.சோமசுந்தரம், உபசெயலாளர்: எவ். ஏ. ரஞ்சன், பொருளாளர்: கே. ரி. நாயகம், உபபொருளாளர் ஜெயரட்ணசிங்கம்.

### இயக்குநர்கள்

மானிப்பாய் தொகுதியின் ஐ. தே. கட்சிக் கிளை உள்ளூராட்சி மன்ற பிரிவுப்பேரவை இயக்குநர்களையும் தெரிவு செய்துள்ளது.

இயக்குநர் விபரம் பின்வருமாறு:

சுன்னாகம் பட்டணசபை பிரிவு சபா சின்னத்தம்பி முருகையா, ஏழாலை கிராம, சபை பிரிவு ப. சோமசுந்தரம், சிவஞானசுந்தரம் மானிப்பாய் பட்டணசபைப் பிரிவு டாக்டர் லோகநாதன் விசுவரத்தினம், மானிப்பாய் கிராமசபைப் பிரிவு: ஸ்ரீபதிநாதன், இந்திரலிங்கம், உடுவில் கிராமசபைப் பிரிவு: கே. வி. ஜெயரட்ணசிங்கம் ராஜமோகன்.

மேற்படி தொகுதி அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ் மேற்படி தெரிவுகளை நடத்தினர். (உ)

## சாப்புச்சட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு!

நெல்லியடி, புதன்

பருத்தித்துறை நகரில் சாப்புச்சட்டத்தைமீறி, கடைகள் திறப்பதினால் நூற்றுக்கணக்கான வர்த்தக சிப்பந்திகள் விடுமுறையின்றி அவதிப்படுகிறார்கள் என்று பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள மக்கள்சந்தையின் உட்பகுதியில் உள்ள கடைகளும் நகரின் பிரதான வீதியில் உள்ள கடைகளும் சாப்புச் சட்டமான ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்பட்டுவருகின்றன.

இதனால் நூற்றுக்கணக்கான வர்த்தக சிப்பந்திகள் வாரத்தில் ஒருநாள் கிடைக்கும் விடுமுறையைக்கூடப் பெற்றுக்கொள்ளமுடியாது திண்டாடுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் நிவாரணம் தருவார்களா என்று இவர்கள் கேட்கிறார்கள். (ஆ)

## அன்பளிப்பு

சங்கானை, புதன்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பழைய மாணவரும், மேற்கு ஜெர்மனியில் தொழில் புரிபவருமான பிராயன்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர் மேற்படி கல்லூரியின் மின் இணைப்பின் பொருட்டு 1050 ரூபாவை அன்பளிப்பாக அனுப்பிவைத்துள்ளார். (உ)

## இலங்கை — இந்திய

# கப்பல்சேவை இனிமேல் வாரம் 4 நாளாகும்

மன்னார், புதன்

அடுத்த மாதத்திலிருந்து இலங்கை—இந்திய கப்பல் சேவை அதிகரிக்கப்படும் என்று தெரிகின்றது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இப்போது வாரத்தில் இரு சேவைகள் மட்டுமே நடைபெறுகின்றன. இனிமேல் சேவைகள் அதிகரிக்கப்படலாம். வாரத்தில் நான்கு சேவைகள் நடைபெறும். திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நான்கு தினங்களிலும் கப்பல், 'ராமானுஜம்' தலைமன்னார் வரும். செவ்வாய், புதன், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் அது இந்தியா செல்லும்.

அத்துடன் சுங்கப்பரிசோதனைகள் இனி கப்பலில் நடைபெறாது. இறங்குதுறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் சுங்கச் சோதனைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கப்பல் சேவை அதிகரிக்கப்படுவதையிட்டுப் புகையிரத சேவையிலும் மாற்றங்கள் செய்யப்படலாம் எனத் தெரிகின்றது. (அ)

# தொழிலாளர் சங்கக் கிளை குற்றச்சாட்டு

வவுணதீவு, புதன்

"பாடசாலை ஊழியர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நியதி அடிப்படையிலான பதிவுத் திட்டத்தை பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள் புறக்கணித்துவிட்டு, தமது விருப்பின்படி பதவியுயர்வு வழங்குகிறார்கள்" என்று அகில இலங்கைப் பொதுச் சேவைத்தொழிலாளர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால் ஏராளமான ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி சங்கங் கிளை கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கும், கல்வியமைச்சருக்கும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கிளைச்செயலாளரும் மத்திய சங்க நிர்வாகக்குழு உறுப்பினருமான திரு. நா. சிவயோகநாதன் மேலிடத்திடம் கோரியுள்ளார். (உ)

## உகண்டா படுகொலை:

# ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு விசாரிக்க வேண்டும்

### பிரிட்டன் வலியுறுத்து

லண்டன், பெப். 23

கடந்த மாதம் உகண்டாவில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைசெய்ய வேண்டும் என்று பிரிட்டன் ஐ.'நாவைக் கேட்டுள்ளது.

இதுபற்றி உடன் விசாரணை நடத்துமாறு மனிதஉரிமைகள ஆணைக்குழுவை வற்புறுத்துமாறு பிரிட்டனின் புதிய வெளிநாட்டமைச்சர் டாக்டர் டேவிட் ஓலன்பிரிட்டி ஐ.நா. பிரதிநிதிகள் குழுவைக் கேட்டுள்ளார்.

உகண்டா அதிபர் இடி அமீனைக் கொலைசெய்யும் முயற்சி இடம்பெற்றதாகவும் இதையடுத்து பலர் கொல்லப்பட்டு நூற்றுக்குமதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர் என்னும் ஏற்கனவே செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

ஒரு மேற்றிராணியாரும், இரு அமைச்சர்களும் அண்மையில் கொல்லப்பட்டனர் என்றும் செய்தி வெளிவந்தது தெரிந்ததே. (இ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
தேன்சிந்துதே வானம்

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி- வைஜந்திமாலா
தேன்நிலவு

NOW SHOWING
RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45.
MAN IN THE IRON MASK

Regal (Jaffna) Daily 4-45, 7-00 & 9-30 P. M.
Roger Moore in
The Man Who Haunted Himself
(Color)

வெற்றிகரமான 75வது நாள்
ஸ்ரீதர் எம். ஜி. ஆர். - மஞ்சுளா சந்திரகலா -லதா
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
அடுத்த வெளியீடு! 11-3-77 முதல்
பாட்டும் பரதமும்

ராணி கமலஹாசன் -- நிபா - சாவித்திரி நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
அந்தரங்கம்

வின்ஸர் கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
அபூர்வ ராகங்கள்

ராஜா கடைசி வாரம்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

வெலிங்டன் எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பணக்காரக் குடும்பம்

லிடோ ஏ. வி. எம். ராஜன் - லதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

மனோகரா 4-வது "ஹவுஸ்புல்" வாரம்
காட்சி நேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு மன்னிக்கவும்.
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
இதயக்கனி
[ஈஸ்மன் கலர்]



# தமிழர் கூட்டணி தேர்தலில் ஏன் போட்டியிடும்?

## கிளிநொச்சியில் தலைவர்கள் விளக்கம்

கிளிநொச்சி, புதன்

'கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்றப்பிரதிநிதியாகத் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற நோக்கில் நான் தமிழர் விடுதலைக்கூட்டணியில்சேர்ந்து கொள்ளவில்லை. தமிழ்பேசும் இனத்தின் அடிப்படை உரிமைகளைக் கட்டிக்காத்துப் பேண வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடனும். நான் சார்ந்திருந்த தமிழ்க்காங்கிரஸ் கட்சி தமிழர் கூட்டணியில் முக்கிய பங்கு வகித்து ஒன்றுசேர்ந்து இருந்தமையாலுமே நான் இன்று கூட்டணியின் அசைக்க முடியாததொண்டனுக இருக்கிறேன்'.

இவ்வாறு கிளிநொச்சி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கிளைக்கூட்டத்தில்தலைமைதாங்கிப் பேசிய திரு. வீ. ஆனந்தசங்கரி கூறினுர்.

தொண்டர்கள் என்றும் தொண்டர்களாகவே இருக்க வேண்டும். தொண்டினை உதறித் தள்ளுபவர்களாகஇருக்கக் கூடாது. தமிழ்பேசும் இனத்தின் விடிவை நோக்கிப் பல இன்னலான இலட்சியங்களையும் காப்பாற்ற, போராட என்றும் சித்தமாய் இருக்கிறேன்' என்று திரு. 'ஆனந்தசங்கரி கூறினுர்.

### நம்மை உணரவேண்டும்

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டதாவது:

மற்றவர்களிடம் குறை, குற்றம்கூறும் நாம் எம்மை உணர்ந்து பார்க்கவேண்டும். குற்றம் குறை காண்பதை விடுத்து தீவிரமாக இயக்கத்தில் சேர்ந்து உழைக்கச் சித்தமாக வேண்டும். எம்மை நாம் சிந்திக்கத் தொடங்கவேண்டும். அப்பொழுது மற்றவர்குறை எமக்குப்படாது. மற்றவர் குறையைப் பெரிதுபடுத்துவது நமது இயக்கத்தின் நோக்கமல்ல, விடுதலை உணர்வே நமது நோக்கம், குறிக்கோள்.

மூன்று முக்கிய காரணங்களுக்காக தமிழர் விடுதலைக்கூட்டணி அடுத்ததேர்தலில் நிற்க வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது.

ஒன்று தமிழ் ஈழம் அமைப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பாக இத்தேர்தல் அமையும்.

இரண்டாவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் காக்கப்படாமல், காட்டிக் கொடுக்கும் ஒருசிலர் பேரவை உறுப்பினராக வரவிடாது தடுத்து நிறுத்துதல்.

மூன்ருவது:

(அ) தமிழ்மக்களின் சகல உரிமைகளையும் பாராளுமன்றம் மூலமாகவும், மாற்றுவழிகள் மூலமாகவும் பெறல்.

(ஆ) உலகநாடுகளுக்குளமது ஒற்றுமையைக்காட்டி எமது இயக்கத்திற்கு ஆதரவும் வலுவும் தேடுவது.

இந்த மூன்று நோக்கத்திற்காக அடுத்த தேர்தலில் தமிழர்கூட்டணி போட்டியிடும். மற்றும் வட்டுக்கோட்டை மாநில மாநாட்டு தீர்மான அடைப்படையில் இவை எடுத்தாளப்படும்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளிலேயும் தமிழர் விடுதலைக் கூட்டணி இயங்கும். தமிழ் பேசும் மக்களும் எமது லட்சியம் நிறைவேறுமட்டும் கண்ணியமாகச் செயல்படவேண்டும்.

### யார் வேட்பாளர்கள்?

ஆற்றலும், திறமையும். தியாகமும், வழிநடாத்தும் திறமையும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றில் உறுதியும் கொண்டவர்களையே தமிழர் கூட்டணி அடுத்துவரும் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தும்.

எங்களை அரசினர் சிறைவைத்து வழக்குத் தொடர்ந்த வேளையில் மறைந்த இருபெரும் தலைவர்களும் தமிழ் இனத்தின் உறுதியைப் பலப்படுத்தி தமிழ் ஈழம் எமது லட்சியம் என்பதனை உலகறியச் செய்தமை, கூட்டணியின்எதிர்காலவளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது.

மற்றும் திரு. ஐ. திருஞானம், திரு. சி. ஏகாம்பரம், திரு. ஏ. ஏ. முருகேசு, திரு. பா. வை. ஜெயபாலன், திரு. இ. கிருஷ்ணராசா ஆகியோர் பேசினர்.

### குலைக்க திட்டமிடுகின்றனர்

செயல் அதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் குறிப்பிட்டதாவது:

நான்கு ஐந்து ஆண்டுகளாக பல்வேறு திசைகளிலும் இருந்த தமிழ்மக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஒருஐக்கியமான விடுதலை உணர்வுக்குள் திரட்டிய பிற்பாடு இந்த ஒற்றுமையைக் குலைக்க பல்வேறு திசையிலும் சிலர் திட்டமிடுகின்றனர். இதற்கு தமிழ் மக்களும், தமிழ்த் தலைவர்களும், இளைஞர்களும் இடம் கொடுக்கக்கூடாது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் மிகவும் முக்கியமானது. தனித் தமிழ் ஈழத்தை மக்கள் அங்கீகரிக்கின்றனர் என்ற சர்வசன வாக்கெடுப்பாகவே அடுத்து வரும் தேர்தல் அமையும்.

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலை இயக்கமாக இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி உலக நாடுகளின் நம்பிக்கைக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும். தமிழர் கூட்டணி சார்பில் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக இருந்த பிரதிநிதிகளாக வருவோர் தனிநாடு அமைக்கும் காலநிலையில் தன்னையும், தன் சொத்துகளையும் இழக்கவேண்டியநிலை உருவாகும் என்பதை மறந்து விடக்கூடாது. இவற்றை மனதில் வைத்துச் செயல்படவேண்டும்.

நம்மை நாமே ஆழவேண்டும் என்ற முடிவு மாற்றமுடியாத முடிவாக இருக்கும் எந்தப் பேச்சுவார்த்தைகள் ஏற்பட்ட போதும், ஏற்பட இருக்கும் போதும் வட்டுக்கோட்டை மாநில மாநாட்டு முடிவே இறுதியானது. கூட்டணி எந்த இலட்சியத்திற்கு உருவானதோ அதன் இலட்சியத்தை அடைவதற்கு என்ன தியாகங்களைச் செய்யவும் சித்தமாய் இருக்கிறது.

தமிழ்மக்களுக்கு பிரச்சினை இல்லை உரிமைகள் கொடுபட்டது என்று கூறியவர்கள் இன்று பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றனர். இந்த நிலையைப் பார்க்கும்போது தமிழர் கூட்டணி எவ்வளவு விசுவாசமாக, இலட்சியம்உள்ளஇயக்கமாக விளங்குகிறது என்பது புரியும்.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எஸ். எஸ். ஆர்.
சரோஜாதேவி
மணப்பந்தல்

யாழ்லயன் களியாட்டு விழா:

# 90 மைல் சைக்கிள் போட்டி வவனியாவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். லயன் களியாட்டு விழாவையொட்டி நடைபெறும் 90மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி வவனியாவில் ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் முடிவடையும்.

90 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி அடுத்த மாதம் 20ம் தேதிகாலை 6மணிக்குவவனியா முற்றவெளியில் ஆரம்பித்து வைக்கப்பட்டு, கண்டி வீதி வழியாக யாழ். விளையாட்டு அரங்கில் முடிவடையும்.

இப்போட்டிக்கு 22 அங்குல ஸ்ராண்டாட் மொடல் சைக்கிள் பாவிக்கப்படவேண்டுமென்றும், வயது நிபந்தனையில்லையென்றும், வடமாகாணத்தில்வசிப்பவரெனக்கிராம சேவகரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

20 வயதிற்குட்பட்ட மாணவர்களின் 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி அடுத்த மாதம் 20ம்தேதி காலை 6மணிக்கு யாழ். விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகி, காங்கேசன் துறை வீதி, தெல்லிப்பளைச் சந்தி, பண்டத்தரிப்புச் சந்தி, கல்லுண்டாய் வீதிவழியாக யாழ். விளையாட்டு அரங்கை வந்தடையும்.

இப்போட்டிக்கு 22 அங்குல ஸ்ராண்டர்ட்மொடல்சைக்கிள் பாவிக்கவேண்டுமென்றும், 20 வயதிற்குட்பட்ட மாணவரென, வடமாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் அதிபரின் அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

5 மைல் யுவதிகளுக்கான சைக்கிள் ஓட்டம் அடுத்த மாதம் 20ந்தேதி காலை 7-30 மணிக்கு யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகி 5 முறைகள் அரங்கைச்சுற்றியபின்முடிவடையும்.

இப்போட்டியில் எந்தவிதமான சைக்கிளையும் பாவிக்கலாமென்றும், வயது நிபந்தனை இல்லையென்றும், வடமாகாணத்தில் வசிப்பவரெனக்கிராம சேவகரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

26 மைல் மரதன்வீதி ஓட்டம் அடுத்தமாதம் 20ந்தேதி காலை யாழ். விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகி பருத்தித்துறைவீதி, அச்சுவேலிச்சந்தி, தெல்லிப்பழை வீதி, வசாவிளான்சந்தி. தெல்லிப்பழைச் சந்தி, காங்கேசன் துறைவீதி வழியாக யாழ்.விளையாட்டு அரங்கைவந்தடையவேண்டும்.

இப்போட்டியில் பங்குபற்றுவோர் வடக்கில் வசிப்பவரென கிராமசேவகரிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படவேண்டும். (க-அ)

## 25 ஆயிரம் வெளிவாரி பட்டமாணவர்

கொழும்பு, புதன்

பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு நாடுமுழுவதிலுமிருந்து 25ஆயிரம் பேர் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

மேலும் 10ஆயிரம் பேர் இவ்வருடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

ஈழநாடு
The EELANADU

# பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் தோல்வி!

லண்டன், பெப். 23
பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசு நேற்று 29 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

வேல்ஸ் ஸ்கொட்லண்ட் ஆகிய பிரதேசங்களுக்கு தனித்தனி பாராளுமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற மசோதா மீதே தொழிற்கட்சி அரசு தோற்கடிக்கப்பட்டது.

இந்த மசோதாவை எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் 20 தொழிற்கட்சி அரசாங்க உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். பலர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தொழிற்கட்சி அரசு உடன் இதுபற்றி தீவிர ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியது. (இ)

## வேலணை 40,000 ரூபா கொள்ளை வழக்கு:

# நான்கு எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்!

## முதலாம் எதிரி குற்றவாளி!

யாழ்ப்பாணம், வியாழன்
வேலணை 40,000 ரூபா கொள்ளை வழக்கில் 1ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். தீர்ப்பு வழங்குவது மார்ச் மாதம் 4ந் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனப். எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் வேலணையில் வீடுஉடைத்து நகைகள், பணம் உட்பட40,000 ரூபாகொள்ளையடித்ததாக மயிலன் சின்னராசா, சின்னத்தம்பி சபாரத்தினம் அல்லது குட்டி, சுப்பிரமணியம்நாராயணன், அந்தோனிப்பிள்ளை செபமாலை, சின்னராசா செல்லமுத்து, மயிலன் பாக்கியம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

4ம் எதிரி வழக்கு ஆரம்பத்தின்போது குற்றத்தை ஒப்புக் கொண்டார். 5ம்,6ம் எதிரிகள் விசாரணைநடுவில் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இம்மூவருக்கும் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2-ம் எதிரி கொள்ளைப்பொருட்களை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். 3-ம் எதிரி காலமாகிவிட்டார்.

இவ்வழக்கில் 1ம், 2ம், 5ம், 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி மு. நேமிநாதனின்அனுசரணையுடன் ஆஜரானார். 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். ஏ. யேசுதாசன் ஆஜரானார்.

1ம், 2ம் எதிரிகளுக்கு தண்டனை விதிப்பது அடுத்தமாதம் 4ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# அரிசி திருட்டு வழக்கில் எதிரிகள் விடுதலை!

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் உணவுக் களஞ்சியத்திலிருந்து 98 ரூபா பெறுமதியான அரிசியைத் திருடியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளான காவலாளிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் திரு. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். உணவுக் களஞ்சியத்திலிருந்து 98 ரூபா பெறுமதியான அரிசியைத் திருடியதாக என். நடராசா, பெனடிக்ற் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி. நாகராசாவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஏ. அன்ரனியும் ஆஜரானர்கள்.

விசாரணையின்பின் நீதவான் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (க)

# வீடமைப்பு அமைச்சர் பொறுப்பேற்பு

கொழும்பு, புதன்
வீடமைப்பு அமைச்சராக பதவியேற்றுள்ள தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் இன்று வீடமைப்புஅமைச்சுக்கு சென்று தமது கடமையைப் பொறுப்பேற்றார். புதிய அமைச்சரை அதிகாரிகள் வரவேற்றனர்.

நடைமுறையில் இருந்துவரும் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் யோசனை தமக்கு இல்லையென்று அமைச்சர் இங்கு அதிகாரிகள் மத்தியில் பேசுகையில்தெரிவித்தார். (ஆ)

......

## துன்னாலை கொலைமுயற்சி வழக்கு:

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம்,வியா.
துன்னாலைக்கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதி மன்றத்தில் ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் துன்னாலையில் செல்லையா தியாகராசா, செல்லையா பாலகிருஷ்ணன் ஆகியோர் வைத்திலிங்கம் திருநாவுக்கரசுவைக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் சட்டத்தரணி எஸ். செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினர்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் தனிமையில்கூடி மந்திராலோசனை செய்தபின் விசாரணையைத் தொடருவதில் பிரயோசனமில்லை எனக்கூறியதைத்தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார். (க-அ)

# ஆரியகுளத்தில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், வியாழன்
சிபால்மணம் மாருத பச்சிளம் சிசு ஒன்றின் சடலம் ஆரிய குளத்தில் மிதக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

பிறந்து சில மணித்தியாலங்களுக்குள்ளாகவே இந்த ஆண் சிசு மரணமடைந்திருக்கலாம் என பரபரப்பூட்டும் இச்சம்பவம் பற்றிக் கருதப்படுகிறது.

தகாத உறவின் மூலம் பிறந்ததாகக் கருதப்படும் இச் சிசுவின் தாய் யார் என்று தேடி வருவதுடன் கொலை செய்யப்பட்டு குளத்தில் இச் சிசு விசப்பட்டதா? என்பது குறித்தும் யாழ்ப்பாணம் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

# வேலணை கொலை: தேடப்பட்டவரும் சரண்!

வண்ணார்பண்ணை, வியா
வேலணை கள்ளுத் தவறணைக் கொலை சம்பந்தமாக தேடப்பட்டுவந்த முதலாவதுசந்தேக நபரான பா. நாகரத்தினம் நேற்று பொலிசில் சரணடைந்தார்.

காங்கேசு சுப்பிரமணியம் என்பவரைக் கொலைசெய்தது தொடர்பாக ஏற்கனவே சொக்கலிங்கம் பூபாலசிங்கம், சின்னத்தம்பி தியாகராசா, அம்பலவாணர் சண்முகரத்தினம் ஆகிய மூவரும் றிமாண்டில் இருப்பது தெரிந்ததே.

சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா மூலம் சரணடைந்த முதலாவது சந்தேகநபரை வருகிற 1ம் திகதிவரை றிமாண்டில்வைக்குமாறு நீதிபதிஉத்தரவிட்டார். (ஆ)

## 3 மாதம் பூட்டியிருக்கும் வீடு குடியிருப்பாளருக்குக் கிடைக்கும்

கொழும்பு, புதன்
தொடர்ந்து மூன்று மாதங்கள் பூட்டப்பட்டிருக்கும் வீடுகளை வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு தேசிய வீடமைப்பு இலாகா நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதற்கான அதிகாரங்களை வீடமைப்பு இலாகா வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கியுள்ளது. (இ)

......

# கார்ட்டரின் பட்ஜட்டில் 5,700 கோடி டாலர் துண்டு

வாஷிங்டன், பெப். 23
அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் 5 ஆயிரத்து 700 கோடி ரூபா துண்டு விழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கார்ட்டர் அண்மையில் வெளியிட்ட 2 வருட புதிய பொருளாதாரத் திட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத்தில் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. (இ)

## கூ. மொ. வி. விநியோகிக்கும்

கொழும்பு, புதன்
எதிர்வரும் தமிழ் - சிங்கள புதுவருடத்தினத்தை முன்னிட்டு கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனம் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சிந்தெட்டிச் சேலைகளையும், காற்சட்டைத் துணிகளையும் விநியோகிக்கவுள்ளது. (உ)

## 13 கோடி வெளிநாட்டு நாணயம்

கொழும்பு, புதன்
கப்பல் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு 13 கோடிரூபா வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துள்ளது. (இ)

## சுந்தரர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் இக் கூட்டத்தில கூட்டணி சார்பில் நிறுத்தப்படவிருக்கும் அபேட்சகர்கள் பற்றியும் ஆராயப்படும்என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அடுத்த பொதுத் தேர்தலில், யார் யாரை நிறுத்தவேண்டுமென இக் கூட்டத்தின் பின்னர் இளைஞர் பேரவை ஆலோசனை வழங்குமென்றும் தெரியவருகிறது. [க-ஆ]

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சிரமம் இருந்தது. பொருட்களை வெளியில் எடுப்பதற்கு அரசாங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிந்திருந்தது.

இதனுல் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து பங்கீட்டுப் பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டு உத்தரவுபெற்ற வர்த்தகர்கள்மூலம் விநியோகிக்கப்பட்டன- நேற்று பண்ணுகம் சங்கானைப் பகுதியில் விநியோகம்நடந்தது.

## வேலைநிறுத்தம் தொடர்கிறது

இதுஇப்படியிருக்க சங்கானை பல நோ கூ. சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம்தொடர்ந்து நடக்கிறது. (ஆ)

## அனுதாபம்

மாவிட்டபுரம், புதன்
காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை பொதுத்தொழிலாளர் யூனியன் மறைந்த தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

அமரர் ஜி.ஜி.கைத்தொழில் மந்திரியாக இருந்தபோது இச்சிமெந்துத் தொழிற்சாலையையும், இதேபோன்று இன்னும் அரும்பெரும் சேவைகளையும் தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களும் ஆற்றிஞரென்றும் உலகம் போற்றும் ஒரு சட்டமேதை அவர் என்றும் அவரது மறைவு பேரிழப்பானது என்றும் அந்த அனுதாபத்தீர்மானம் கூறுகிறது. (அ)

# கொழும்பில் மருத்துவமாதர் வேலைநிறுத்தம்

கொழும்பு, புதன்
கொழும்பு காசில் வீதியில் உள்ள ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 45 மருத்துவமாதர் மேற்படி ஆஸ்ப்பத்திரியின் தாதி ஒருவரை தற்காலிக வேலை நீக்கம் செய்யுமாறு கோரி வேலை நிறுத்தத்தில்ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாஸ்பத்திரியில் கடமையாற்றும் ஒரு தாதிக்கும் மருத்துவமாதருக்கும் மத்தியில் ஏற்பட்ட தகராறு ஒன்றையடுத்தே இவ் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார இலாகா மருத்துவமாதர் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சமரசத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருசிறது.

## நியமனம்

வேலணை, வியா.
தீவுப்பகுதி பயிர்ச்செய்கைக் குழு அங்கத்தவர்களுக்கு நாளை யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் திரு. செந்தில் நாதனுல் அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும். வேலணை கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழு மண்டபத்தில் இவ்வைபவம்இடம்பெறும், (ஆ)

## முழங்காவிலில் காணி

பண்டத்தரிப்பு, புதன்
குழாய்க்கிணறு நீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ் முழங்காவில்-பகுதியில் படித்த வாலிபருக்கு அரசினரால் காணிவழங்கப்படவுள்ளது. தலா இரண்டு ஏக்கர் வீதம் வழக்கப்படவிருக்கும் இக்காணிகளில் உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O Box 49, Jaffna Telegram: Eelanadu. Telephone 389. Regist red as a Newspeper in Sri lanka.